செய்தி வெளியீடு எண்: 074 நாள்: 30.01.2018

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (30.1.2018) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 3 கோடியே 30 லட்சத்து 77 ஆயிரத்து 600 ரூபாய் செலவில் பச்சிளம் குழந்தைகளுக்கு காது கேளாமையை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் முன்னோடி திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக, சென்னை, வடபழனியில் உள்ள நகர சமுதாய நல மையத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கு காது கேளாமையை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் திட்டத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

சமுதாயத்தில் ஓர் அங்கமாக மாற்றுத் திறனாளிகளை அங்கீகரித்தும், சமுதாய வளர்ச்சியில் அவர்களை பங்கேற்கச் செய்தும், அவர்களுக்கு சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்விற்காக பல்வேறு முன்னோடித் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

செவித்திறன் குறைபாடு என்பது இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளில் ஏற்படும் பொதுவான குறைபாடுகளில் ஒன்றாகும். 1 முதல் 3 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் இக்குறைப்பாட்டினை கண்டறிய தவறிவிடுவதால் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சியில் குறைபாடு ஏற்படுகிறது. எனவே, பச்சிளம் குழந்தைகளுக்கு காது கேளாமையை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு 3 கோடியே 30 லட்சத்து 77 ஆயிரத்து 600 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பச்சிளம் குழந்தைகளில், செவித்திறன் குறைபாடுடைய குழந்தையினை முதலில் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய பரிசோதனையினை மேற்கொண்டு, காது கேளாமையின் அளவுகோலினை அறிந்து, அதற்கு தகுந்த உபகரணங்கள் மற்றும் ஆரம்ப நிலை பயிற்சியினை குழந்தையின் 6 மாதத்திற்குள்ளாகவே துவங்கி, அவர்களை மற்ற குழந்தைகளுக்கு இணையாக வளர்ச்சியடையச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பச்சிளம் குழந்தைகளுக்கு காது கேளாமையை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் இத்திட்டம், முதல் கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 11 தாய்சேய் மருத்துவமனைகளிலும், சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட தலைமை மருத்துவமனை,வட்டாரமருத்துவமனைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப

சுகாதார நிலையங்கள் ஆகிய 10 மருத்துவமனைகளில் முன்னோடித் திட்டமாக (Pilot Scheme) செயல்படுத்தப்படும்.

மேலும், பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் போக்குவரத்து சாலை சந்திப்புகளில், சாலையை பாதுகாப்பாக எளிதில் கடப்பதற்கு வசதியாக முதல் கட்டமாக, சென்னையில் 150 சாலை சந்திப்புகளில் 43 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 300 குரல் ஒலிப்பான் சமிக்ஞைகளை துவக்கி வைக்கும் அடையாளமாக சென்னை, காமராஜர் சாலை – பெசன்ட் சாலை சந்திப்பில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் சாலையை எளிதில் கடப்பதற்கு வசதியாக நிறுவப்பட்டுள்ள குரல் ஒலிப்பான் சமிக்ஞைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

இந்த குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் நிறுவப்படுவதன் மூலம், பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் சாலையை கடக்கும் சமயம், போக்குவரத்து சமிக்ஞையில் உள்ள வண்ண ஒளிக்கு ஏற்றவாறு கூடுதலாக குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் மூலம் ஒலி எழுப்பப்பட்டு, பிறர் உதவியின்றி பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் தனியாக சாலையை கடப்பதற்கு வழிகாட்டியாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நலத் துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு.ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**